BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

An international open access, peer- reviewed, refereed journal

# திருவாசகம் : இருமை முதல் அனுபவ அத்வைதம் வரை

# Thiruvaasagam: From Dualistic Devotion to Experiential Oneness

**ஆய்வாளர் : ஜெ. ஜெப கிறிஸ்டினா**

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), சேலம் - 7, தமிழ்நாடு, இந்தியா.

**நெறியாளர்: முனைவர் ஜ.பிரேமலதா, எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்., பிஎச்.டி.,**

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), சேலம் - 7, தமிழ்நாடு, இந்தியா.

**J .Jeba Christina**

Research Scholar, Department of Tamil, Government College of Arts (A), Salem- 7, Tamilnadu, India

jjchristinaprince@gmail.com. 9842056370 / 9944843619

**Guide: Dr. J. Premalatha, M.A., M.Ed., M.Phil., Ph.D.,**

Associate Professor, Department of Tamil, Government Arts College (Autonomous), Salem - 7, Tamil Nadu, India.

Piyupremsurya90@gmail.com, 9488417411

**Abstract**

Thiruvaasagam occupies a pre-eminent place in the Tamil Saiva bhakti tradition. Composed by Manickavaasagar, the text is both a devotional masterpiece and a profound poetic expression of the saint’s mystical experience of God. This study argues that the spiritual experience articulated in the Thiruvaasagam begins within the dualistic framework of Pati (Lord) and Pasu (soul), central to Saiva Siddhanta, and gradually culminates in a state of non-dual realization.The central thesis of this paper is that, although the selected hymns initially present a clear distinction between the individual self and the Divine, this duality is progressively dissolved through total surrender, divine grace, and inner transformation. Through a close textual analysis of selected verses, the study demonstrates the successive stages of spiritual development: the soul’s awareness of its limitations, unconditional surrender to God, the transformative operation of grace, and finally the realization of an experiential unity in which the distinction between devotee and Lord is transcended.The paper concludes that the Thiruvaasagam is not merely a work of devotional literature, but also a profound spiritual testimony that traces the soul’s journey from dualistic devotion to non-dual union with the Divine. In this way, Manickavaasagar's poetry reveals the dynamic interplay between bhakti and gnanam, affirming that intense devotion can culminate in the highest mystical realization.

**Keywords:** Thiruvaasagam, Manickavaasagar, Divine Experience, Dualism, Non-duality, Dwaitha, Advaita.

**ஆய்வு சுருக்கம்**

மாணிக்கவாசகரின் திருவாசகம் பக்தி இலக்கியப் பெருநூல். இந்நூல் மாணிக்கவாசகரின் இறை அனுபவ வெளிப்பாடாகவும் அமைந்துள்ளது. பதி – பசு எனும் இருமை அடிப்படையில் தொடங்கும் இறை அனுபவம் அத்வைத நிலையை அடைகிறது என்பதே இக்கட்டுரையின் மையக் கருத்தாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களின் நுணுக்கமான உரைநடை ஆய்வின் மூலம், உயிரின் கட்டுப்பாடு, சரணாகதி, அருள், இறுதியில் இருமையின்மை அனுபவம் ஆகிய நிலைகள் படிப்படியாக வெளிப்படுகின்றது என்பதை இக்கட்டுரை நிறுவுகிறது.

**திறவுச்சொற்கள் :** திருவாசகம், மாணிக்கவாசகர், இறை அனுபவம், இருமை கோட்பாடு, இருமை இன்மை, துவைதம், அத்வைதம்

**முன்னுரை**

தமிழ் பக்தி இலக்கியம், உணர்ச்சியும் தத்துவமும் ஒன்றிணைத்து திகழும் தனித்துவமிக்க மரபாகும். இம்மரபுவழி எழுந்த ‘திருவாசகம்’ ஆழ்ந்த இறை அனுபவ மொழியைக் கொண்டுள்ளது.[1] சைவ சித்தாந்த கட்டமைப்பிற்குள் இருமை அனுபவம் முதல் இருமையின்மை உணர்தல் வரை ஒரு ஆழமான ஆன்மீக பயணத்தை திருவாசகம் பதிவு செய்துள்ளது.

**உலக நோக்கில் இருமை கோட்பாடு**

உலக அளவில் நோக்கும் பொழுது இருமைவாதம் மனித சிந்தனையின் அடிப்படையாகக் காணப்படுகிறது. அது அறிவியல், மதம், சமூக அமைப்புகளின் அடித்தளமாகவும் காணப்படுகிறது. இருமைவாதம், உலகத்தை எளிமையாக பகுத்தும் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு கருவி எனலாம்[2]. ஆனால் இறுதி உண்மை அது அல்ல என்பது உலகோர் தெளிந்த உண்மை நிலை எனவே உயிர் சிந்தனைகளும் தத்துவங்களும், இருமைவாதக் கோட்பாட்டை கடந்து சென்று உண்மைகளை அறிய முற்படுகின்றன.

மேலைத்தத்துவத்தில் ரெனே டெஸ்கார்டஸ் முன்மொழிந்த மனம் - உடல் இருமை கிழக்கத்திய மரபில் காணப்படும் யிங் - யாங் இருமை பரவலாக அறியப்பட்டுள்ள இருமைவாத அணுகுமுறைகள். சாதாரண மக்களின் பார்வையில் இருமைவாதம் அன்றாட வாழ்வில் இரண்டாகப் பிரித்து புரிந்துகொள்ளக்கூடிய உலகியல் கண்ணோட்டமாகவே காணப்படுகிறது.[3] உடல் - மனம், நன்மை – தீமை, உண்மை – பொய், ஏழை – பணக்காரன், ஆண் - பெண், பகல் - இரவு போன்ற கூரிய வேறுபாடுகளின் அடிப்படையில் அன்றாட வாழ்வியல் சிந்தனையில் இருமைவாதம் பொதிந்துள்ளது.இருமைவாதச் சிந்தனையானது தொடர்ச்சிகளைப் புறக்கணிக்கிறது; யதார்த்தத்தை எளிமையாக்குகிறது, மதிப்பீட்டுச் சார்புகளை அறிமுகப்படுத்துகிறது என்று அதன் விமர்சகர்கள் வாதிடுகின்றனர்.[4]

**இந்திய தத்துவ இருமைவாதம்**

இந்திய தத்துவ இயலின் அடிப்படையில் பரந்துப்பட்ட ஓர் நம்பிக்கையே இருமைவாதம். இந்து தத்துவத்தின் சாங்கிய மற்றும் யோகா சார்ந்த சிந்தனையாளர்களும் இதை நனவு – நனவின்மை இருமைவாதமாக வடிவமைக்கின்றனர். இவ்வகை இருமைவாதத்தை மேற்கத்திய மனத்தத்துவம் மற்றும் மீவியலில் காணப்படும் மனம் - உடல் இருமைவாதத்துடன் ஒப்பிடலாம். பௌத்த தத்துவம் மனம் - பொருள் இருமைவாதமாக இதை வெளிப்படுத்துகிறது. இந்து தத்துவத்தில் காணப்படும் இருமைவாதத்தின் மற்றொரு வகை துவைத வேதாந்தம் ஆகும். இதன் அடிப்படையில் கடவுளும் உலகமும் தனித்தனி சாராம்சங்களைக் கொண்ட இருமை வாதத்தை மாயை எனக் கருதி அத்வைத்தத்தை, முழுமையான ஒருமையாக காணமுற்படுகின்றது.[5]

**திருவாசகத்தில் இருமைவாதத்தின் படி நிலைகள்**

**முதல்நிலை**

**பதி – பசு – பாசம் :** மாணிக்கவாசகரின் திருவாசகம் இறைவனை பதியாகவும், உயிரை பசுவாகவும், மலத்தை பாசமாகவும் வேறுபடுத்தி,[6] உயிர் மும்மலங்களால் அல்லல்வுறும் ஆரம்ப நிலையை காட்டுகிறது.

*"நமச்சிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க*
*இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்*
*தாள் வாழ்க! ஏகன் அனேகன்*
*இறைவன் அடி வாழ்க!"*
*(திரு:சிவபுராணம், பா:1)*

*"பொல்லா வினையேன்! நின் பெருஞ்சீர்*
*புகழுமாறு ஒன்றறியேன்!*
*பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி*
*மெய்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே*
*மெய்யா! விமலா! விடைப்பாகா!"*
*(திரு:சிவபுராணம் 1:5)*

**இரண்டாம் நிலை**

**பக்தி மற்றும் சரணாகதி**

இறைவனோடு தொடர்பு கொள்ளும் உயிர், இறைவனின் திருவடிகளைச் சரணடையும் பக்தி நிலையின் மூலம் இருமை தன்மையை வெளிப்படுத்துகிறது.

*"மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து உன்*
*விரையார் கழற்கென்*
*கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி*
*வெதும்பி உள்ளம்,*
*பொய்தான் தவிர்த்து உன்னைப் போற்றி*
*சயசய போற்றி யென்னுங்,*
*கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக்*
*கண்டுகொள்ளே"(திரு:திருச்சதகம், ப:1)*

**மூன்றாம் நிலை**

**மலம் நீங்குதல்**

மும்மலங்களை ஒழித்து இறை அருளால் இறைவனோடு ஒன்றிணைந்து நிற்கும் மனித ஆன்மா, சிவாத்வைதம் நிலையை அடைகிறதாக மாணிக்கவாசகர் பாடுகிறார்.

*"மலம் சோரும் ஒன்று வாயிற் குடிலை*
*மலங்கப் புலன் ஐந்தும்*
*வஞ்சனையைச் செய்ய*
*விலங்கு மனத்தால், விமலா வுனக்குக்*
*கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்"*
*(திரு:சிவபுராணம்:பா:11)*

**நான்காம் நிலை**

**உணர்ச்சிப் பெருக்கும் - உயிர் பிணைப்பும்**

இந்நிலையில் மாணிக்கவாசகர் இறைவனுடன் தனக்கு ஏற்படும் உயிர் பிணைப்பை உணர்ச்சிப் பெருக்குடன் வருணிக்கிறார். ஆயினும் 'நான் - நீ' என்று தனித்தனி உண்மையாகவே உணர்ந்து பாடுகிறார். 'நீ - இறைவன்', 'நான் - இறையடியார்',

*“தந்தது உன் தன்னை கொண்டது என்தன்னைச்*
*சங்கரா ஆன் கொலோ சதுரர்*
*அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்*
*யாது நீ பெற்றது ஒன்று என்பால்*
*சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்”*

*(திரு :கோயில் திருப்பதிகம், பா.10)*

*“நான் ஆர் என் உள்ளம் ஆர்*
*ஞானங்கள் ஆர் என்னை யாரறிவார்*
*வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல்”*

*(திரு:திருக்கோத்தும்பி,பா:2)*

**இறுதிநிலை**

**இரண்டற்ற அனுபவம்**

இத்தகைய இருமைவாத பயணம், மாணிக்கவாசகரை இயன்மாற்றம் என்னும் ஓர் உருமாற்ற ஆன்மீக அனுபவத்தின் வழியாக இட்டுச் செல்கிறது என்றாலும், உயிர் தனது தனித்தன்மையை முற்றிலும் இழக்கவில்லை. இந்த அனுபவத்தின் இறுதியில் உயிர் இறையுடன் ஒன்றாக கலந்து நிற்க முயல்கிறது. இதனை முழுமாற்றம் என்று கூறுவர்.[7]

*“…….. எனைக் கலந்தாண்டலுகே*
*அயல் மாண்டு அருவினைச் சுற்றமுமொண்டு*
*அவனியின்மேல்*
*மயல் மாண்டு மற்றுள்ள வாசகம் மாண்டு*
*என்னுடைய*
*செயல் மாண்டவர் பாடி”*

*(திரு:திருத்தெளளேணம், பா.16)*

அதாவது இப்போக்கானது திருவாசக நூலின் தத்துவரீதியாக ‘இருமைவாதமாக’ காணப்பட்டாலும், மாணிக்கவாசகர் தம் சுய அனுபவத்தில் இருமையற்ற ஓர் நிலையைக் கண்டடைகிறார் என்பதாகவே உணரப்படுகிறது.

**திருவாசக இருமை கோட்பாடு**

திருவாசகத்தில் இருமை கோட்பாடு என்பது ஆன்மீகப் பயணத்தின் தொடக்கத்தில் இறைவனிடம் இருந்து தன்னை வேறுபடுத்தி காணும் ஆன்ம நிலை என்று கொள்ளலாம். இது சைவசித்தாந்தத்தின் அடிப்படையினின்று முற்றிலும் வேறுபட்ட இருமை அன்று. மாறாகத ‘ஒன்றாய் வேறாய் உடனாய்’ இருக்கும் ஒரு தனித்துவமான நிலையாகும்.

*“அருளுடை சுடரே! அளிந்ததோர் கனியே!*
*பெருந்திறல் அருந்தவர்க்கரசே!*
*……………*
*தெருளிடத்தடியார் சிந்தையுள் புகுந்த*
*செல்வமே! சிவபெருமானே”*

*(திரு:பிடித்தபத்து, பா:4)*

யான் (ஆன்மா) மற்றும் தான் (இறைவன்) என்ற இந்த பிரிவினை நிலை, ஆன்மா மாயை மற்றும் ஆணவத்தில் கட்டுண்டு கிடக்கும் முதல் நிலையாக கொள்ளலாம். இந்நிலையில், மாணிக்கவாசகர் பதியாகிய இறைவனுக்கும், பசுவாகிய ஆன்மாவிற்கும் இடையேயான தூரத்தை சுட்டிக்காட்டுகிறார்.

*“பாச வேறுக்கும் பழம்பொருள் தன்னைப்*
*பற்றுமா றடியனேற் கருளிப்*
*புசனை உதந்தென் சிந்தையுட் புகுந்து*
*பூங்கழல் காட்டிய பொருளே”*

*(திரு;பிடித்த பத்து, பா:7)*

**ஆன்மாவின் பிரிவு துயர்**

இறை அனுபவத்தில் திளைத்த மனித ஆன்மா, இறைவனை விட்டுப் பிரிந்திருக்கும் பொழுதுகளில் பிரிவுத்துயரில் மூழ்குகிறது. இதை மாணிக்கவாசகரின் ஆன்ம அனுபவத்தின் இரண்டாம் நிலையாகக் கொள்ளலாம். இத்தகைய பிரிவாற்றாமை மாணிக்கவாசகரின் பலப் பாடல்களில் புலப்படுகிறது. இந்த பிரிவு என்பது இருமை கோட்பாட்டின் வெளிப்பாடே ஆயினும் இந்த இருமையின் உணர்வே, இறை அனுபவம் பலப்படி நிலைகளைக் கடந்து மேம்படும் பொழுது, இறையோடு இரண்டற கலந்து நிற்கும் அத்துவித நிலைக்கு ஆன்மாவை இட்டுச் செல்கிறது.

*“விடை விடாது உகந்த விண்ணவர் கோவே*
*வினையனேனுடைய மெய்ப் பொருளே!*
*முடைவிடாது, அடியேன் முத்து அறமண்ஆய்,*
*முழுப் புழுக் குரம்பையிலே கிடந்து*
*தடைபடா வண்ணம் காத்து, எனை ஆண்ட*
*கடவுளே! கருணை மா கடலே!”*

*(திரு: பிடித்தபத்து, பா:2)*

**குருவாக அருளும் இறைவன்**

அடுத்த படிநிலையில் இறைவனின் இருப்பை நித்தமும் வேண்டித் தேடும் ஆன்மா அவனையே தலைவனாக, குருவாக ஏற்று அண்டிக் கொள்கிறது. இந்நிலையில் இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் இடையிலான இடைவெளி குறையத் தொடங்குகிறது. ஊண்கலந்து உயர்கலந்து என்பது போன்ற வரிகள் இருமையாக இருந்த நிலை மாறி மனித ஆன்மா, இறை அருளில் திளைத்து நிற்பதன் உயிர் உணர்வை கண்டு கொள்கிறது. இறை அருளை விடுத்து அலையும்பொழுது மும்மலங்களால் அலைக்கழிக்கப்பட்டு உழலும் துயரையும் உணர்ந்து கொள்கிறது.

*“கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை*
*கண்டபின்*
*என்அப்பன் எண்ணொப்பில் என்னையும்*
*ஆட்கொண்டருளி*
*வண்ணப்பணித்து என்னை வாவென்ற*
*வான்கருணைச்*
*சுண்ணப்பொன் நீற்றற்கே சென்று ஊதாய்*
*கோத்தும்பீ”(திரு:திருகோத்தும்பி, பா:4)*

**இறுதி இருமையின்மை**

ஒப்புயர்வு அற்ற இறை இன்பத்தில் திளைத்த மனித ஆன்மா, இறைவனுடன் ஒன்றியும் அதே சமயம் தனது தனித்தன்மையை இழக்காமலும் இருக்க விளைகிறது. இந்நிலையில் மனித ஆன்மா தன் பூவுலக இருப்பு சார்ந்த செயல்களில் ஈடுபட்டாலும் மாயம், கன்மம், ஆணவம் என்ற மும்மலங்களில் இருந்து விடுதலைப் பெற்று பேரின்ப அத்துவித நிலையில் நிற்கிறது.

*“முத்தி நெறி அறியாத மூர்க்கரொடும் முயல்வேனை;*
*பக்திநெறி அறிவித்து, பழ வினைகள் பாறும் வண்ணம்*
*சித்த மலம், அறுவித்து, சிவம் ஆக்கி, எனைஆண்ட*
*அத்தன் எனக்கு அருளிய ஆறு ஆர் பெறுவார்?*
*அச்சோவே!” (திரு:அச்சோபதிகம்,பா:1)*

இறைவனின் அருள்மூலம் இருமையைக் கடந்து தனக்குள்ளே உள்ள சிவத்தை கண்டடைந்து தானும் அதுவாகி நிற்கிறது. இவ்வுயர் அறிவே பின்னர் உடலெனும் மட்கலம் உடைத்து ஜீவாத்மா, பரமாத்மாவை அடைந்தேறும் வீடுபேறு என்னும் விடுதலையைப் பெற உதவும் முன்னோட்டமாக அமைகிறது.

*“ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி*
*உவப்பிலா ஆனந்த மாய*
*தேனினைச் சொறிந்து புறம்புறந் திரிந்த*
*செல்வமே! சிவபெருமானே!*
*யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்”*
*(திரு:பிடித்த பத்து, பா:9)*

**முடிவுரை**

மாணிக்கவாசகரின் திருவாசகம் ஆரம்ப நிலையில் இருமை நிலையை வெளிப்படுத்தினாலும், பக்தியோடு இறைவனை சரணடைந்தால், அனுபவரீதியாக இருமையற்ற ஒருமையை உணரலாம் என்று வலியுறுத்துகிறது. இரு வேறுபட்ட நிலையில் இருந்து இறையருளால் ஒன்றிணைந்து நிற்கும் அனுபவம் மாணிக்கவாசகரின் தனிப்பட்ட இறையனுபவமாக திகழ்கிறது. திருவாசக இருமை என்பது இருப்பியல் வகைப்பாடு அன்று. அதுஅனுபவத்தின் வழியாக ஒன்றிணையும் இயக்கமிக்க ஆன்மீக நிலை. இவ்வனுபவம் ஒவ்வொரு தனி மனித ஆன்மாவும் தன்னையறிதல் மற்றும் தனிமனித மன ஒழுக்கம் மூலமாக ஒரு சமூகமாகவே உய்வடைய வழிகாட்டுகிறது. இருமை என்பது உண்மையின் ஆரம்பம் ஒன்றிணைவு அதன்நிறைவு என்பதே திருவாசகத்தின் மூலப்பாடம்.

**துணைநூற் பட்டியல்**


1. காசு பிள்ளை(உரை), திருவாசகம், மாணிக்கவாசகர், ஸ்ரீசெண்பகாபதிப்பகம், சென்னை, 2014
1. சுந்தர சண்முகனார், கடவுள் வழிபாட்டு வரலாறு, புதுவைப் பைந்தமிழ் பதிப்பகம், புதுச்சேரி, முதற்பதிப்பு, 1988,
2. சுப்பு ரெட்டியார், டாக்டர்.ந., தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-14, மூன்றாம் பதிப்பு, 1988,
3. ஞாசம்பந்தன், அ.ச., திருவாசகம் சில சிந்தனைகள் - 1, கங்கை புத்தக நிலையம், சென்னை-7, 2000
4. ஞானசம்பந்தன், அ.ச., திருவாசகம் சில சிந்தனைகள்-3, 2000, கங்கை புத்தக நிலையம், சென்னை-7, V.47.
5. https://groups.google.com/d/msgid/mintamil.
6. https://www.ebsco.com.
7. https://www.news.mowval.in.
8. Jacques Derrida, Of Grammatology, Motilal Banarsidass Publishers Pvt. Ltd., Delhi, 1944